565—

அரியமங்கலம் பேரூராட்சியிலுள்ள குப்பை உரக்கிடங்கை வேறு இடத்திற்கு மாற்றல்.

*5304—திரு. த. ரத்தினவேல் :

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருச்சி நகராட்சி குப்பைகள், கழிவுப் பொருள்கள் அனைத்தும் அரியமங்கலம் பேரூராட்சியில் ஊருக்கு நடுவில் கொட்டி உரக்கிடங்காக வைத்திருப்பதால் சுகாதாரக்கேடு விளைவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதை வேறு இடத்திற்கு மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) அரியமங்கலத்திலுள்ள உரக்கிடங்கை மதுரை ரோடு பஞ்சப்பூரிலுள்ள நகராட்சிக்குச் சொந்தமான கழிவு நீர் நீரேற்று நிலையம் உள்ள இடத்தில் தற்போது உபயோகத்தில் இல்லாத 52 ஏக்கர் இடத்தில் மாற்றி அமைக்கத்தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

திரு. த. ரத்தினவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மதுரை ரோடில் உள்ள பஞ்சப்பூருக்கு மாற்றுவதற்கு ஆவன செய்யப்படுவதாகச் சொன்னார்கள். அந்தப் பகுதி மக்கள் சார்பில் அதற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 566, செல்வி கோ. மல்லிகா, மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

566—

கூட்டுறவுச் சங்கத்தில் அரிசி பற்றாக்குறையைப் போக்க நடவடிக்கை

*4161—செல்வி கோ. மல்லிகா :

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) புவனகிரி தொகுதிக்கு கூட்டுறவுச் சங்கத்தில் அரிசி பற்றாக்குறை ஏற்படுவதால் மேலும் அதிகபடுத்தித்தர அரசு ஆவன செய்யுமா ?

LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

(அ) மற்றும் (ஆ) புவனகிரி தொகுதி உட்பட எந்தத்தொகுதியிலும் உள்ள நியாய விலைக் கடைகளில் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்படும் அரிசியில் பற்றாக்குறை ஏற்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 10-25

செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரிசியின் பற்றாக்குறையைப் போக்கி அதிகப்படுத்தி கொடுத்ததற்காக மிக்க நன்றி. பல்வேறு பகுதிகளில் அளவு குறைவதாக மக்கள் கூறியுள்ள கோரிக்கையை நிறைவேற்றும் வகையில் இதுவரை எந்த முதல்வரும் ஆட்சி புரியாத வகையில் எவ்வகையிலும் குறைவின்றி நிறைவாக ஆட்சி புரியும் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியின் ஆட்சியில் அந்த அளவை அதிகப்படுத்தித் தர அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடும்ப அட்டைகளுக்கு, பெரியவர்களுக்கு 4 கிலோ வீதமும், சிறியவர்களுக்கு 2 கிலோ வீதமும், 12 கிலோவிற்கு மேற்படாமல் இப்போது ஒரு குடும்ப அட்டைக்கு அரிசியை வழங்கிக் கொண்டிருக்கிறோம். இந்த அரிசியை ஒழுங்காக், எடை குறைவு இல்லாமல் கொண்டுபோய் சேர்ப்பதற்கு எல்லாவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கிறது. இதிலே குறைவு இல்லாமல் பார்த்துக்கொள்வோம் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி ரமணி நல்ல தம்பி.

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்குநேரி, இராதாபுரம், சாத்தாங்குளம் தொகுதியில் உள்ள 42 பனை வெல்ல சொசைட்டிகளுக்கு உள்ள கடைகளை அரசு நியாயவிலைக் கடைகளுக்கு எடுத்திருப்பதாக அறிகிறேன். ஆகவே என்னுடைய தொகுதியில், அந்த மாற்றங்களால், அந்தந்த கடைகளிலேயே வைத்து நடத்தாத காரணத்தால், குமாரபுரம், திசையன்விளை போன்ற பகுதிகளிலிருந்து..........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி ரமணி நல்லதம்பி கேள்வி புவனகிரியைப் பற்றியது. நீங்கள் பொதுவாகக் கேள்வியைக் கேட்கப் போகிறீர்கள் என்பதால் அனுமதித்தேன். பிறகு இராதாபுரத்திற்குப் போனால் எப்படி ? தனிக் கேள்வி போடவும்.

வினா எண் 567 திரு. வ. சத்தியமூர்த்தி மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்.

567—

கால்நடை மருத்துவர்களுக்கு இடர்பாட்டுப்படி.

*5214—திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கால்நடை மருத்துவர்களில் ஒரு பிரிவினருக்கு இடர்பாட்டுப்படி (Ri k Allowarce) வழங்கப்படவில்லையெனில் அவர்களுக்கும் இடர்ப்பாட்டுப்படி (Risk Allowarce) வழங்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆபத்து மிகுந்த கால்நடை நோய்களுக்கு மருத்துவ சிகிச்சை அளிக்கும் பிரிவுகளில் பணியாற்றும் கால்நடை உதவி மருத்துவர்களுக்கு இடர்பாட்டுப்படி (Risk Allowance) வழங்கப்படுவது போல் மற்ற பிரிவுகளில் பணியாற்றும் கால்நடை மருத்துவர்களுக்கும் இடர்பாட்டுப்படி வழங்க தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.

திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கும் கால்நடை மருத்துவ அகாரிகள் ஊராட்சி ஒன்றியங்களில் விரிவாக்க அலுவலர்களாக மாற்றுவதற்கு உரிய அதிகாரிகளாக இருக்கிறார்கள். கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கப்படுகிறபோது Biloresis, T. B., Worm infection, Viral infection போன்ற கொடிய தொற்று நோய்கள் ஏற்படுகின்றன. ஆனால் அந்தக் கொடிய தொற்று நோய்களின் அறிகுறி தெரிவதற்கு சில ஆண்டுகள் கூட ஆகின்றது. ஆகவே மருந்தகத்தில் வேலை செய்கின்ற அதிகாரிகள் விரிவாக்க அதிகாரிகளாக வருகிறபோது இந்த நோய்க்கு உட்பட்டால் எந்த உதவித் தொகையும் அவர்களுக்கு கிடைக்கும் வாய்ப்பில்லை. ஆகவே விரிவாக்க அலுவலர்களுக்கும் இந்த 'ரிஸ்க் அலவன்ஸ்' வழங்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.